

# விருதுநகர் மாவட்ட ஆட்சியராக திரு.இரா.கண்ணன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.11.19) பொறுப்பேற்றுக்கொண்டார்

---

தமிழ்நாடு குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையராக பணியாற்றி வந்த திரு.இரா.கண்ணன்,இ.ஆ.ப., அவர்கள் தமிழக அரசாணைப்படி விருதுநகர் மாவட்ட ஆட்சியராக இன்று (18.11.19) பொறுப்பேற்றார்.

1998-ல் குருப் 1 தேர்வில் தேர்ச்சி பெற்று லால்குடியில் 2003-ம் ஆண்டில் வருவாய் கோட்டாட்சியராக பணியாற்றினார். 2004 - 2005-ம் ஆண்டுகளில் நிலவரி திட்ட அலுவலராக பணியாற்றியுள்ளார்கள். 2004ம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் சுனாமி மறுசீரமைப்பு பணிகளிலும், 2005 - 2006-ம் ஆண்டுகளில் திருவள்ளுவர் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு பணிகளிலும் முக்கிய பணியாற்றியுள்ளார்கள். திருத்தணியில் 2005 - 2006-ம் ஆண்டுகளில் வருவாய் கோட்டாட்சியராக பணியாற்றியுள்ளர்கள். 2013 - 2015-ம் ஆண்டுகளில் சென்னை மாநகராட்சி நிலப் பிரிவில் வருவாய் அலுவலராக பணியாற்றியுள்ளார்கள்.

2015-ல் இந்திய ஆட்சிப்பணி பதவி உயர்வு பெற்று 2015 - 2016ம் ஆண்டுகளில் சென்னை மாநகராட்சி சுகாதாரத் துறை துணை ஆணையராகவும், 2017 - 2019ம் ஆண்டுகளில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்பணிகள் இயக்குநராகவும், 2019-ம் ஆண்டில் தமிழ்நாடு குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையராகவும் பணியாற்றியுள்ளார்.

மேலும், 2015-ம் ஆண்டில் சென்னையில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு பணிகளிலும், 2018-ம் ஆண்டில் திருவாரூர் மாவட்டத்தில் ஏற்பட்ட கஜா புயல் மறுசீரமைப்பு பணிகளிலும் முக்கிய பணியாற்றியுள்ளார்.

தற்போது விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவராக இன்று (18.11.19) பொறுப்பேற்றுக்கொண்டார்.